Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 164 | உள்ளூர் - 13.06.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 164 | வெளியூர் - 14.06.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

சனி அமைப்பு: 2027 வரை, சுப பலன்களை பெற உள்ள ராசிகள்!

BRO மத்திய அரசு வேலை 899 காலிப்பணியிடங்கள்!

8–வது சம்பள கமிஷனில் அரசு ஊழியர்களுக்கு ஜாக்பாட்!

பாஜக நிர்வாகி விஜயதரணி த.வெ.க.வில் ஐக்கியம்!

## புதிய தலைவரை நோக்கி தமிழக பாஜக!

சென்னை, ஜூன். 13–

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மாற்றப்பட உள்ளதாகவும், பிரதமரின் ஒப்புதல் கிடைத்தவுடன் புதிய தலைவர் அறிவிக்கப்படுவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கட்சியிலிருந்து விலகி, 'வீ த லீடர்ஸ்' என்ற புதிய இயக்க த்தைத் தொடங்கினார்.




தேர்தல் தோல்வி மற்றும் அண்ணாமலையின் புதிய இயக்கம்தந்த நெருக்கடியைத் தொடர்ந்து, தமிழக பாஜகவை முழுமையாக மறுசீரமைக்க தேசியத் தலைமை தீவிரமாக இறங்கியுள்ளது.

அந்த வகையில், தற்போதைய மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் விரைவில் மாற்றப்பட்டு, அவருக்கு மத்திய அமைச்சரவையில் இடம் வழங்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

அதன்படி, புதிய மாநிலத் தலைவரை நியமிப்பதற்கான ஆலோசனைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. குறிப்பாக மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் ராம சீனிவாசன், மாநிலச் செயலாளர்கள் அஸ்வத்தாமன், வினோஜ் பி.செல்வம், தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச்.ராஜா ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## இளைஞர்களின் குரலாக களமிறங்கும் ராகுல்!

புதுடெல்லி, ஜூன். 13–

வினாத்தாள் கசிவு, நீட் தேர்வு சர்ச்சை, வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து, நாடு முழுவதும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை ஒருங்கிணைக்கும் புதிய பிரசாரத்தை காங்கிரஸ் கட்சி தொடங்கியுள்ளது.

இதற்காக ராகுல் காந்தி நேரடியாக களமிறங்க உள்ளதாக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.




காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையிலும், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் வழிகாட்டுதலிலும் இந்த இயக்கம் முன்னெடுக்கப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக, மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடும் மாநாடுகளை ராகுல் காந்தி நடத்த உள்ளார்.

முதல் மாநாடு ஜூன் 17ல் ராஜஸ்தானின் கோட்டாவில் நடைபெறுகிறது. தொடர்ந்து ஜூலை 10ல் அலகாபாத், ஜூலை 11ல் பாட்னா மற்றும் ஜூலை 14ல் டில்லியில் மாநாடுகள் நடத்தப்பட உள்ளன.

நீட், அரசு வேலைவாய்ப்பு தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளில் ஏற்பட்ட வினாத்தாள் கசிவுகள் மற்றும் முறைகேடுகள் காரணமாக லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது. தேர்வுக் கட்டண உயர்வு, வேலைவாய்ப்பு பற்றாக்குறை, ஆட்சேர்ப்பு தாமதம் போன்ற பிரச்னைகளும் இந்த மாநாடுகளில் பேசப்பட உள்ளன.

## ஜி7 மேடையில் இந்தியா!

# பிரான்ஸ் பயணத்தில் பிரதமர் மோடி உலக அரங்கில் உயரும் இந்திய செல்வாக்கு!

## இந்தியா–பிரான்ஸ் உறவுக்கு புதிய வலிமை!!

புதுடில்லி, ஜூன். 13–

டில்லியில் இருந்து (ஜூன் 13) பிரதமர் மோடி 6 நாட்கள் வெளிநாட்டு பயணமாக பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்கு புறப்பட்டு சென்றார்.

பிரதமர் நரேந்திர மோடி 6 நாட்கள் அரசுமுறை பயணமாக ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஸ்லோவேகியா நாட்டுக்கு புறப்பட்டு சென்றார். இந்தப் பயணத்தின்போது 52–வது ஜி7 மாநாட்டில் பங்கேற்கிறார். இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:




அடுத்த சில நாட்களில், இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மற்றும் இந்தியப் புலம்பெயர்ந்தோருடனான கலந்துரையாடல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நான் பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவிற்கு புறப்பட்டுள்ளேன். இந்தப் பயணம் நைஸ் நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் தொடங்கும். குறிப்பாக, 'பாரத் இன்னோ வேட்ஸ்' நிகழ்ச்சியில் அதிபர் மேக்ரான் கலந்துகொள்வார். இந்தியாவும் பிரான்சும் 'இந்தியா–பிரான்ஸ் புத்தாக்க ஆண்டை'க் கொண்டாடுவதால், 'பாரத் இன்னோவேட்ஸ்' நிகழ்வானது முக்கியத்துவம் வாய்ந்த தாக அமையும். நைஸ் நகரில், அதிபர் மேக்ரானுடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவேன். ஜூன் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில், ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக நான் எவியான் நகரில் இருப்பேன். அங்கு நான் பல்வேறு உலகத் தலைவர்களுடன் கலந்துரையாடுவேன். நான் வரும் 18ம் தேதி பாரிஸில் இருப்பேன்.

அங்கு, அதிபர் மேக்ரானுடன் இணைந்து விவாடெக் 2026 மாநாட்டில் கலந்துகொள்வேன். தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான ஐரோப்பாவின் முக்கியக் கூட்டங்களில் ஒன்றில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நாளில், பிரான்சில் உள்ள இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடுவதையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ஜூன் 18ம் தேதி இரவு மீண்டும் டில்லிக்கு பிரதமர் மோடி திரும்புகிறார்.

## இந்தியர்கள் 3 பேர் பலி: அமெரிக்கா குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்த ஈரான்!

ஈரான், ஜூன். 13–

ஓமன் கடற்பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த மூன்று கப்பல்கள் அடுத்தடுத்து தாக்கப்பட்டன. இதில் கப்பலில் இருந்து 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் உடல்கள் இந்தியா கொண்டு வர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்திய கப்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியானது. இதனால் இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரை அழைத்து இந்தியா கண்டனம்



தெரிவித்தது.

இதற்கிடையே, இந்திய கப்பல்கள் மீது ஈரான்தான் தாக்குதல் நடத்தியது என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.

இந்நிலையில், 3 இந்திய மாலுமிகள் பலியான சம்பவத்தில் தங்கள்மீது குற்றம்சாட்டிய அமெரிக்காவுக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்தது.

இதுதொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி கூறியுள்ளதாவது:

3 இந்தியர்களின் உயிரைப் பறித்த இந்திய வணிகக் கப்பல்கள் மீதான அமெரிக்காவின் கொடூரமான தாக்குதல்கள், ஆயுதமேந்திய கொள்ளை மற்றும் அரசு ஆதரவிலான கடல்சார் கொள்ளை ஆகியவற்றை உள்ளடக்கிய அமெரிக்காவின் தொடர்ச்சியான கொள்கைக்கு தெளிவான சான்றாக அமைந்துள்ளன.

கொல்லப்பட்ட இந்திய மாலுமிகளின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்திய மக்களுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுத்து, கடல்வழிப் போக்குவரத்தின் சுதந்திரத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்கும் அமெரிக்கா வின் சட்ட விரோதநடவடிக்கைகளுக்கு, சர்வதேச சமூகம் அந்நாட்டைப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

## திமுக - தவெக தான் பா.ஜ.,வின் கொள்கை எதிரிகள்: அமித் ஷா திட்டவட்டம்!

சென்னை, ஜூன். 13–

"பா.ஜ.,வின் கொள்கை எதிரிகள் தி.மு.க.,வும், தமிழக வெற்றிக் கழகமும் தான்," என, தமிழக பா.ஜ., நிர்வாகிகளிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். தமிழக பா.ஜ.,வின் மாநில மையக்குழு கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், பா.ஜ., தேசிய தலைவர் நிதின் நபின், தேசிய அமைப்பு பொதுச்செயலர் சந்தோஷ், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன், மேலிட பொறுப்பாளர்கள் அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி, மத்திய அமைச்சர் முருகன், மூத்த தலைவர்கள் ராஜா, ராதாகிருஷ்ணன், தமிழிசை, வானதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் அமித் ஷா பேசியதாவது: பிரதமராக நீண்ட நாட்கள் பணியாற்றிய சாதனையை பிரதமர் மோடி படைத்துள்ளார். அவர் தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்த நலத்திட்டங்களை, தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களிடமும் சேர்க்க வேண்டும். மாவட்டந்தோறும் மூத்த தலைவரை அனுப்பி, பொதுக் கூட்டங்கள், செய்தியாளர்கள் சந்திப்பை நடத்த வேண்டும். அண்ணாமலை விலகியதால், பா.ஜ.,வுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை தொண்டர்கள் உணரும் வகையில், கட்சி வளர்ச்சி பணியில் நிர்வாகிகள் முழு கவனம் செலுத்த வேண்டும். பா.ஜ.,வுக்கு கொள்கை ரீதியான



எதிரி தி.மு.க.,வும், த.வெ.க.,வும் தான். எனவே, கடந்த தி.மு.க., ஆட்சி ஊழல்கள், த.வெ.க., ஆட்சியில் நடக்கும் தவறுகளை மக்களிடம் பேச வேண்டும்.

தமிழகத்தில் பா.ஜ., வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். எதை பற்றியும் கவலைப்பட தேவையில்லை; நான் பார்த்துக் கொள்கிறேன். ஊர் ஊராகச் சென்று தொண்டர்களை சந்திப்பது மற்றும் மக்களிடம் மத்திய பா.ஜ., அரசின் சாதனைகளை கூறுவது மட்டுமே உங்கள் வேலை. இவ்வாறு அமித் ஷா பேசியுள்ளார்.

மத்திய கேபினட் அமைச்சர் பதவி

மத்திய அமைச்சரவை விரைவில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. அப்போது, தமிழகத்தில் தீவிரமாக கட்சி பணியாற்றி வருபவர்களில் ஒருவருக்கு, கேபினட் அந்தஸ்தில் அமைச்சர் பதவி வழங்க அமித் ஷா விருப்பமாக உள்ளார். அவரை அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி, மக்கள் சந்திப்பு மற்றும் குறைகேட்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகளை நடத்தி, அதன் வாயிலாக தமிழகத்தில் பா.ஜ., வளர்ச்சியை வேகப்படுத்த அமித் ஷா வியூகம் வைத்துள்ளார்.



தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 13.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 30-ம் தேதி

# வேலை கிடைக்குமா? AI வைக்க போகும் ஆப்பு!




இன்றைய ஐடி உலகில் நாம் எந்த திசையில் திரும்பினாலும் ஒரே ஒரு பேச்சு தான். அது ஆர்டிபிசியல் இன்டெலிஜென்ஸ் தொழில்நுட்பம். AI பயன்பாடு அதிகரித்ததில் இருந்து பல நிறுவனங்கள் பணிநீக்கம் செய்து வருகின்றன. இந்தியாவின் முன்னணி ஐடி நிறுவனமாக இருக்கும் டிசிஎஸ் நிறுவனத்தின் தலைவர், சந்திரசேகரன் அடுத்த 3 வருடங்களுக்குள் ஊழியர்களுக்கு இணையான AI ஏஜென்ட்களை பயன்படுத்த திட்டமிட்டிருப்பதாகக் கூறி அதிர்ச்சியை கிளப்பினார்.

AI தொழில்நுட்பத்தால் வேலை வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகிறது. ஆனால் இந்தியாவில் ஏஐ ஒட்டுமொத்த வேலைகளையும் காலி செய்யாது. ஆனால் அதை விட மிகப்பெரிய ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. பல வருடங்களாக இந்தியாவில் உள்ள நடுத்தர குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளுக்கு ஒரே ஒரு விஷயத்தை தான் கூறிக் கொண்டிருக்கின்றனர். “நன்றாக படித்து ஒரு டிகிரியை வாங்கி IT வேலையில் சேர்ந்து விடு.. அதன் பிறகு லைஃப் செட்டில் ஆகிவிடும்” என்று.. இந்த விஷயத்தை தான் AI மெல்ல மெல்ல உடைத்துக் கொண்டிருக்கிறது. AI வந்ததன் காரணமாக ஒரு தலைமுறையின் எதிர்காலமே கேள்விக்குறியாகும் சூழல் தென்படுகிறது.

ஏனெனில் டிசிஎஸ் நிறுவனத்தின் தலைவர் அதிக அளவில் AI ஏஜென்ட்களைப் பயன்படுத்த இருப்பதால், இந்த முறை ரெக்ரூட்மெண்ட் குறைவாகவே இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார். அப்படியானால் பாதிக்கப்பட போவது என்னவோ என்ட்ரி லெவல் ஊழியர்கள் தான். ஜூனியர் அனாலிஸ்ட், கோடர், டெஸ்டர், ப்ராசஸ் ஒர்க்கர் டாக்குமெண்டேஷன் டீம் போன்றவற்றில் பணிபுரியும் ஃபிரஷர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறையும் வாய்ப்புள்ளது. இது டிசிஎஸ் நிறுவனத்திற்கு மட்டுமல்ல.. பிற நிறுவனங்களும் ஏஐ பயன்பாட்டை அதிகரித்தால் இதே தான் நிலைமை. ஏஐ வேலை வாய்ப்பு சந்தையை 3 பிரிவுகளாக பிரித்து விடும்.

அதில் முதலாவதாக ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் தொழில்நுட்பத்தை நன்கு பயன்படுத்த தெரிந்த ஊழியர்கள், சீனியர் மேலாளர்கள் போன்றவர்களுக்கு அடுத்தடுத்த இன்கிரிமெண்ட் கிடைத்து அவர்கள் அதிக சம்பளத்தில் பணிபுரிவார்கள். அதே நேரம் படித்துவிட்டு வேலைக்குச் செல்லாமல் இருக்கும் சிலர் ஸ்விக்கி, சொமேட்டோ போன்ற சர்வீஸ் செய்யும் வேலைகளுக்கு சென்று விடுவார்கள். ஏனெனில் இந்த வேலைகளை எப்போதுமே ஒரு சாப்ட்வேரை கொண்டு செய்ய முடியாது. அதனால் இந்த வேலைகள் அப்படியே இருக்கும். ஒருவேளை இது போன்ற வேலைகளை ரோபோக்களை வைத்து செய்ய வேண்டுமானாலும் அதற்கு அதிக ஆண்டுகள் எடுக்கும். இது போன்ற வேலைகளுக்கு உடல் உழைப்பு அதிகம், சம்பளம் குறைவாகவே இருக்கும்.

மூன்றாவதாக ஒரு நடுத்தர கல்லூரியில் படித்துவிட்டு வேலைக்கு செல்ல காத்திருக்கும் நபர்களுக்கு தான் பெரிய பாதிப்பு ஏற்படும். கஸ்டமர் சப்போர்ட், டேட்டா என்ட்ரி போன்ற வேலைகளை மனிதர்களை விட ஏஐ மிக துல்லியமாக செய்து விடுகிறது. இதனால் நிறுவனங்கள் வேலைகளுக்கு ஆட்களை எடுப்பதை குறைத்து வருகின்றன. இப்படி இருப்பதால் பெரிய கல்லூரிகளில் படிக்காத அல்லது சுமாராக படித்த கோடிக்கணக்கான பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளே இல்லாமல் போகும் சூழல் ஏற்படும். மெர்சர்ஸ் இந்தியா கிராஜுவேட் ஸ்கில் இண்டெக்ஸ் 2025 என்ற ஒரு அறிக்கை சமீபத்தில் வெளியானது. அதில் இந்தியாவில் டிகிரி படித்துவிட்டு வெளியாகும் மாணவர்களில் வெறும் 42.60 சதவீதத்தினருக்கு மட்டும் தான் அவர்கள் எதிர்பார்க்கும் நிறுவனங்களில் சேரும் அளவிற்கு ஸ்கில் இருக்கிறது. மீதமுள்ள 57 சதவீதம் மாணவர்களிடம் டிகிரி சர்டிபிகேட் இருந்தும் வேலைக்கு தேவையான திறமை இல்லை என்று தெரியவந்துள்ளது. ஆங்கிலம் நன்கு பேச தெரிந்த மாணவர்கள் மற்றும் பெரிய பெரிய நெட்வொர்க் பற்றிய பரிச்சயம் உள்ளவர்களுக்கு ஏஐ ஒரு சூப்பரான ஆயுதமாக மாறிவிடும். இது போன்ற மாணவர்கள் பெரிய உயரத்திற்கு போய்விடுவார்கள்.

ஆனால் அந்த அளவுக்கு வசதி இல்லாத கிராமப்புறங்களில் இருக்கும் மாணவர்களின் நிலைமை தான் இதில் கவலைக்கிடம். இவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே பெரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுவதில்லை. இப்படி இருக்கும் மாணவர்கள் ஒரு நிறுவனத்தில் கஸ்டமர் சப்போர்ட், டேட்டா என்ட்ரி போன்ற வேலைகளில் சேர்ந்து பணிபுரிந்து வந்தனர். ஆனால் இந்த வேலைகளையும் AI காலி செய்து வருவதால் இது போன்ற நடுத்தர வர்க்க மாணவர்களின் நிலை தான் கவலைக்கிடமாக மாறும். AI ஒருபுறம் வேலை வாய்ப்புகளை அதிகரித்தாலும்.. மறுபுறம் ஒரு சில வேலை வாய்ப்புகளை குறைக்கத்தான் போகிறது. எனவே மாணவர்கள் அதற்கு ஏற்ப தங்களுடைய ஸ்கில் செட்டை மேம்படுத்திக் கொண்டால் தப்பித்து விடலாம்.

# மாநில அரசு பணிகளுக்கான போட்டித்தேர்வுகள்; கலெக்டர் தகவல்!

ராமநாதபுரம், ஜூன். 13–

மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:–

மாநில அரசு பணிகளுக்கான போட்டித்தேர்வுகள் மற்றும் ஒன்றிய அரசுப் பணிகளுக்கான போட்டித்தேர்வுகளுக்கு விண்ணப்பித்து தயாராகிவரும் இளைஞர்களுக்காக இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற அமைப்பின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இதனில் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான நூல்கள், மாதாந்திர இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் அடங்கிய நூலகம் செயல்பட்டு வருகிறது. இத்தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பலர் போட்டித்தேர்வில் வெற்றி பெற்று இன்று அரசுப் பணியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றனர். தற்போது, பணியாளர் தேர்வு வாரியத்தால் (SSC) அறிவிக்கப்பட்டுள்ள Combined Graduate Level (CGL) தேர்விற்கு இலவச பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு 22.06.2026 முதல் துவங்கப்படவுள்ளது. இந்த இலவச பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமும், விருப்பமும் உள்ள போட்டித்தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் தங்களது புகைப்படம் மற்றும் சுய விவரங்களுடன் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது 04567–230160 / 9443992758 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.சிவகுருபிரபாகரன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



தேனி மாவட்டம், தேனி பேருந்து நிறுத்தத்தில் பள்ளி செல்ல காத்திருந்த மாணவிகளுடன் சிங்கப் பெண் சிறப்பு அதிரடி படை போலீசார் ரோந்து சென்றபோது, பொது இடங்களில்பெண்கள் பாதுகாப்பு, குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விளக்கி கூறினார்கள்.

# நீட் மறுதேர்வு நேர்மையாக நடத்தப்படும்; மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் உறுதி!



புதுடெல்லி, ஜூன். 13–

நீட் மறு தேர்வு நேர்மையாக நடத்தப்படும் என மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் உறுதியளித்துள்ளார். வினாத்தாள் கசிவு ஏற்பட்டதாகக் கூறப்பட்டதன் காரணமாக மே 3ம் தேதி நடைபெறவிருந்த நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நீட் மறுதேர்வு ஜூன் 21ம் தேதி நடைபெற உள்ளது. இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: நீட் தேர்வு ஜூன் 21 அன்று மீண்டும் நடைபெறும்.

நீட் தேர்வு எழுத உள்ள அனைத்து மாணவர்களும் நம்பிக்கையுடன் இருந்து, தங்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த மறுதேர்வு நேர்மையாகவும், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் நடத்தப்படும்.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். மருத்துவ நுழைவுத் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை, மாணவர்களுக்குக் கூடுதலாக 15 நிமிடங்கள் அவகாசம் வழங்க முடிவு செய்துள்ளது. இவ்வாறு தர்மேந்திர பிரதான் கூறினார்.

# ஹார்ட் டிஸ்க்குகள் திருட்டு; 3 தனிப்படைகள் அமைப்பு!




சென்னை, ஜூன். 13–

‘ஹார்ட் டிஸ்க்’குகள் திருட்டு வழக்கை விசாரிக்க, சி.பி.சி.ஐ.டி.,யில் மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை அண்ணா சாலையில் உள்ள, மின்வாரிய தலைமை அலுவலகத்தில், தி.மு.க., ஆட்சியில் நடந்த மின்மாற்றிகள் கொள்முதல் ஊழல் தொடர்பான ஆவணங்கள் இருந்த, ‘ஹார்ட் டிஸ்க்’குகள் திருடு போகின.

இது தொடர்பாக, இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு விசாரணை, சி.பி.சி.ஐ.டி., போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரியாக, டி.எஸ்.பி., பிரபு நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு உதவியாக, மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு, விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# தமுக்கம் மைதானத்தில் அரசுப் பொருட்காட்சி-2026 தொடக்க விழா; கலெக்டர் தகவல்!

மதுரை, ஜூன். 13–

மதுரை தமுக்கம் மைதானத்தில் அரசுப் பொருட்காட்சி 2026–யின் தொடக்க விழா வருகின்ற 14.06.2026– அன்று மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி.டி.ஆர். நிர்மல் குமார் அவர்கள் அரசுப் பொருட்காட்சியை தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்ற உள்ளார்கள். மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. பெ.விஸ்வநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றவும் உள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்வேறு அரசுத்துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் பங்கேற்க உள்ளார்கள். இந்தப் பொருட்காட்சியில், அரசு மக்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள், அவற்றில் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக கண்கவரும் வகையில் அரங்குகள் இடம்பெற உள்ளன. மேலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசுத்துறைகளின் சார்பாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. அதேபோல, இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த தனியார் விளையாட்டு மற்றும் கேளிக்கை அரங்குகள், பல்பொருள் விற்பனை அங்காடிகள் இடம்பெற உள்ளன.

மேலும், தினந்தோறும் இன்னிசை கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. அரசுப் பொருட்காட்சி 14.06.2026– அன்று தொடங்கி 45 நாட்கள் தினமும் மாலை 03.45 மணிமுதல் இரவு 10.00 மணி வரை நடைபெறும். அரசுப் பொருட்சியினை பொதுமக்கள் சிரமமின்றி கண்டுகளிக்க கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்திட மாவட்ட நிர்வாகத்தில் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் மாவட்ட அளவில் சிறார்களுக்கான கலைப்போட்டிகள்!

மதுரை, ஜூன். 13–


தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறை மதுரை மண்டலம் சார்பில் சவகர் சிறுவர் மன்றம் வாயிலாக 2025–2026 ஆம் நிதியாண்டில் 5–8, 9–12, 13–16 வயது வகை சிறார்களுக்கிடையே கலை ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய 4 பிரிவுகளில் மாவட்ட அளவில் சிறார்களுக்கான கலைப்போட்டிகள் 17.06.2026 புதன்கிழமை அன்று தேனி பங்களாமேடு பகுதியில் உள்ள நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

குழுவாக இப்போட்டிகளில் பங்கு பெற அனுமதியில்லை. தனிநபராக அனுமதிக்கப்படுவார்கள்.

அதிகபட்சம் 5 நிமிடம் நிகழ்ச்சி நடத்திட அனுமதிக்கப்படுவார்கள். கிராமிய நடனத்தில் கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், காளை ஆட்டம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், தப்பாட்டம் (பறையாட்டம்) மலைமக்கள் போன்ற பாரம்பரிய கிராமிய நடனங்கள் அனுமதிக்கப்படும். ஓவியப்போட்டியில் பங்கேற்பவர்களுக்கான ஓவிய தாள்கள் மட்டுமே வழங்கப்படும். அக்ரிலிக் வண்ணம் மற்றும் நீர் வண்ணம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நடுவர்களால் கொடுக்கப்படும் தலைப்பில் மட்டுமே ஓவியங்கள் வரையப்பட வேண்டும். அதிகபட்சம் 3 மணி நேரம் வரைய அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறும் 9–12, 13–16 வயது வகை சிறார்களுக்கிடையே முதல் பரிசு பெறுபவர்கள் மாநில அளவிலான கலைப்போட்டிகளில் கலந்து கொள்வார்கள். மேலும் இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கலை பண்பாட்டுத்துறையின் மதுரைமண்டல அலுவலகத்தின் 0452–2566420 மற்றும் 8870340186 என்ற தொலைப்பேசி எண்களை தொடர்பு கொண்டு விவரங்கள் பெறலாம். இவ்வாய்ப்பினை 5 வயது முதல் 16 வயது வரையிலான சிறார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.

# லிட்டில் பிளவர் பள்ளியில் மாணவர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு!



ஆண்டிப்பட்டி, ஜூன் 13–

ஆண்டிப்பட்டியில் உள்ள தி லிட்டில் பிளவர் பள்ளியில் எல்.கே.ஜி.யு.கே.ஜி மாணவர்களின் முதல் நாள் வகுப்பு இன்று உற்சாக வரவேற்புடன் தொடங்கியது.

பள்ளி தாளாளர் ஹென்றி அருளானந்தம், முதல்வர் உமாமகேஸ்வரி, தாளாளர் மனைவி தமயந்தி, செயலாளர் மாத்யூஜோயல் ஆகியோர் தலைமையில் மாணவர்கள் சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்கப்பட்டனர். புதிதாக பள்ளிக்கு வந்த குழந்தைகளுக்கு பூங்கொத்து மற்றும் கேக் வழங்கி அசத்தினர்.

உடன் வந்த பெற்றோர்களுக்கு இனிப்பு மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. ஹலோகிட்டி’ கார்டூன் உடையணிந்த கதாபாத்திரம் குழந்தைகளை மகிழ்வித்தது. மாணவர்களும் பெற்றோர்களும் ஹலோ கிட்டியுடன் ஆர்வமாக புகைப்படம் எடுத்துக்கொண்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்கள் தெய்வ நிரஞ்சனா, நாகலட்சுமி, பூமா, கவிதா, ராகினி, தமிழ்செல்வி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். முதல் நாளிலேயே பள்ளி மீது குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சி அமைந்ததாக பெற்றோர்கள் பாராட்டு தெரிவித்தனர்.



# சனி பகவான் அமைப்பு : 2027 வரை வளர்ச்சியும், சுப பலன்களை பெற உள்ள ராசிகள்!




நவகிரகங்களின் பெயர்ச்சிகள் நடக்கும் போது அதற்கான பலன்களும் மாறும். அதே சமயம் சனி பெயர்ச்சி நடக்கக்கூடிய காலத்தில் மக்கள் ஒருவித சிறிய மனம் பயத்துடன் தனக்கான பலனை அறிய நினைப்பார்கள். இருப்பினும் ஜோதிடத்தை பின்பற்றுபவர்கள், ஜோதிட விதிகளை தெரிந்தவர்கள் சனியின் இந்த மாற்றத்தை அனைத்து பெரிய அளவில் கவலை அடைய மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு சனி கெடுப்பவர் அல்ல கொடுப்பவர் என்பது தெரியும். சனி பகவான் தற்பொழுது மீன ராசி சஞ்சரிக்கிறார். இவர் 2027 ஜூன் 3ம் தேதி மீன ராசியில் இருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சியாக உள்ளார். அதனால் மீன ராசியில் சந்திக்கக்கூடிய காலத்தில் எந்தெந்த ராசிகளுக்கு அற்புதமான காலமாக இருக்கும். நன்மைகள் அதிகம் கிடைக்கும் என தெரிந்து கொள்வோம்.

**ரிஷப ராசி**

ரிஷப ராசி சேர்ந்தவர்களுக்கு லாப ஸ்தானத்தில் சனி பகவானின் சஞ்சாரம் உங்களுக்கு பல விதத்தில் மங்களகரமான பலனை தரும். சனியின் அருள் காரணமாக நீங்கள் செய்யக்கூடிய தொழில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். உத்தியோகம் செய்யக்கூடியவர்கள் புதிய பொறுப்புகள், சம்பள உயர்வு பெற வாய்ப்பு உண்டு. நீண்ட காலமாக தடைபட்டிருந்த பணிகளை முடிக்கும் வாய்ப்பு உண்டு. நீங்கள் சொத்து வாங்குவது அல்லது மூதாதையர்களின் சொத்து கிடைப்பது போன்ற நல்ல விஷயங்கள் நடக்கும். வணிகத் துறையில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு புதிய வாய்ப்புகள் பெறுவார்கள். புதிய வருமான வழிகளைப் பெறுவார்கள்.

நீங்கள் செய்யக்கூடிய முதலீடுகள் எதிர்காலத்தில் நல்ல லாபத்தையும், வருமான வாய்ப்பையும் தரும். நிதி விஷயங்களில் ஸ்திரத்தன்மை நிறைந்திருக்கும். நீண்ட காலமாக உங்களை தொந்தரவு செய்து வந்த மன அழுத்தம் விலகும். பல துறைகளில் நீங்கள் எதிர்பார்த்த வெற்றி, மரியாதை கிடைக்கும்.

**கன்னி ராசி**

கன்னி ராசி அன்பர்களுக்கு சம சப்தம ஸ்தானத்தில் சனி பகவானின் சஞ்சாரம் நடப்பது உங்களுக்கு சுகப் பலன்களை தரக்கூடியதாக இருக்கும். உங்களுடைய வாழ்க்கையில் எதிர் கொண்டு வரக்கூடிய சவால்கள் தற்போது விலக வாய்ப்புகள் உண்டு. திருமண வாழ்க்கையில் நல்லிணக்கம் நிறைந்திருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது, ஆலோசனையும் பெறுவது போன்ற நேரங்களில் குடும்பத்தின் பெரியவர்களிடமிருந்து ஆலோசனை.

திருமணம் செய்ய திட்டமிட்டுள்ளவர்களுக்கு பொருத்தமான வரன் கிடைக்கும். மாமியார் வீட்டினரின் மரியாதை மற்றும் ஆதரவை பெறுவீர்கள். உங்களுடைய தொழில் துறையில் திறமை அதிகரிக்கும். கடின உழைப்பிற்கான பலன் எதிர்பார்க்கலாம். மேலும் வேலை செய்யும் இடத்தில் புதிய பொறுப்புகள் வழங்கப்படும்.

இந்த காலத்தில் ஏதேனும் நீதிமன்ற விவகாரங்களில் உங்களுக்கு சாதகமான தீர்வு கிடைக்கலாம். நீண்ட காலமாக உங்கள் மனதில் இருந்த கவலைக்கு நிவாரணம் கிடைக்கும். குடும்பத்தில் இணக்கமான நிலையை கடைபிடிக்கவும்.

**மகரம்**


மகர ராசிக்கு ஏழரை சனி விலகி உள்ளதால், உங்களுடைய பல நாள் பிரச்சனைகள் தீரும். நீண்ட காலமாக நீங்கள் முயன்ற விஷயங்களில் நேர்மறையான பலனை எதிர்பார்க்கலாம்.

உங்களுடைய கடின உழைப்பு, அர்ப்பணிப்புக்கான வெகுமதி கிடைக்கும். உங்களுடைய பணம் தொடர்பான நிர்வாக திறன் அதிகரிக்கும். உங்களுடைய வருமானம் அதிகரிக்கும். அதை சரியான இடத்தில் சேமிப்பது, முதலீடு செய்வது போன்ற விஷயங்களில் ஆர்வம் காட்டவும்.

நீண்ட காலமாக எதிர்பார்த்த நிதி நன்மைகள் மற்றும் நிதி இலக்குகளை அடைய வாய்ப்பு உண்டு.. நீங்கள் முன்னர் செய்த முதலீடுகள் தற்போது பெரிய அளவில் லாபத்தை தரும்.

**குறிப்பு:** இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஜோதிடத் தகவல்களும் தீர்வுகளும் ஜோதிடம் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக எந்தவொரு அறிவியல் பூர்வமான ஆதாரமும் இல்லை. இத்தகவல்களைக் கருத்தில் கொள்ளவும் முழுமையான விவரங்களைப் பெறவும் தகுந்த நிபுணரை அணுகுவது நல்லது.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## குளித்த உடனேயே AC அறைக்குள் சென்றால் என்ன நடக்கும்? இதைப் பற்றித் தெரிந்தால் ஷாக் ஆயிடுவீங்க..!




கோடைக்காலத்தில் ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிப்பது உடலுக்கு இதமாகத் தோன்றலாம். ஆனால், வெயிலின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் பலர் மேற்கொள்ளும் ஒரு பழக்கம் இப்போது மருத்துவ நிபுணர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. குளிப்பதற்கு முன் அறையில் ஏசியை (AC) ஓடவிடுவது அல்லது குளித்து முடித்ததும் உடல் ஈரம் காயும் முன்பே ஏசிக்கு முன்னால் அமர்வது சமீபகாலமாக ஒரு வழக்கமாகிவிட்டது.

இதனால் உடலுக்கு ஏற்படும் ஆபத்துகள் மற்றும் அதிர்ச்சியூட்டும் சுகாதார உண்மைகள் பலருக்குத் தெரிவதில்லை. நிபுணர்களின் கூற்றுப்படி, கோடையில் நம் உடல் வெப்பநிலை பொதுவாக சற்று அதிகமாக இருக்கும். அப்போது குளிர்ந்த நீரில் குளிக்கும்போது உடல் வெப்பநிலை திடீரெனக் குறைகிறது.

இந்நிலையில், அந்த மாற்றத்திற்கு உடல் பழகும் முன்பே, கடும் குளிர் நிலவும் ஏசி அறைக்குள் செல்வது உடலின் வெப்பநிலையைச் சீராக்கும் அமைப்பைப் (thermo-regulation) பாதிக்கிறது. இது நேரடியாக நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பாதிக்கிறது. அதனால்தான் மிகக் குளிர்ந்த அல்லது மிகச் சூடான நீரில் குளிக்கக்கூடாது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

**சுவாசப் பிரச்சனைகள் மற்றும் தீவிர ஒவ்வாமை**

ஏற்கனவே சளி, இருமல், ஆஸ்துமா அல்லது சைனஸ் ஒவ்வாமை போன்ற பிரச்சனைகள் இருந்தால், குளித்த உடனேயே ஏசி அறையில் அமர்வது நல்லதல்ல. ஈரமான தலைமுடி மற்றும் உடலின் மீது ஏசி காற்று படுவது சளி அல்லது இருமலை மோசமாக்குவது மட்டுமல்லாமல், நுரையீரலுக்கு அழுத்தம் கொடுத்து கடுமையான சுவாசச் சிரமங்களையும் ஏற்படுத்தக்கூடும்.

**கண் மற்றும் தோல் பிரச்சனைகள் ஏற்படும் அபாயம்**

ஏசி அறையில் நீண்ட நேரம் இருப்பது அறையின் காற்றை வறட்சியடையச் செய்யும். குளித்த உடனேயே அத்தகைய வறண்ட காற்றுக்கு ஆளாவது கண்களில் அரிப்பு, எரிச்சல் அல்லது வலியை ஏற்படுத்தலாம். மேலும், எக்ஸிமா (eczema) மற்றும் ரோசாசியா (rosacea) போன்ற தோல் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு, சருமம் வறண்டு போவதற்கும் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

**நீர்ச்சத்து இழப்பு மற்றும் கடுமையான தலைவலி**

குளிக்கும் நேரத்திற்கே வெயிலின் தாக்கத்தால் நம் உடலில் நீர்ச்சத்து ஓரளவு குறைந்திருக்கும். குளித்த உடனேயே ஏசி அறைக்குள் செல்லும்போது, அங்கிருக்கும் வறண்ட காற்று சருமத்திலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி, நீர்ச்சத்து இழப்பை மேலும் அதிகரிக்கிறது. இதனால் பலருக்குக் கடுமையான தலைவலி மற்றும் தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகள் திடீரென ஏற்படலாம்.

**வேறு என்ன செய்ய வேண்டும்?**

சிறிது நேரம் காத்திருக்கவும்: குளித்த உடனேயே ஏசி அறையில் அமர வேண்டாம். குறைந்தது 10 முதல் 15 நிமிடங்களுக்கு மின்விசிறியை (fan) ஓடவிடவும்; உடல் வெப்பநிலை இயல்பு நிலைக்குத் திரும்பிய பிறகு ஏசியை இயக்கவோ அல்லது அறைக்குள் செல்லவோ செய்யவும்.

ஈரப்பதம் காயட்டும்: உடல் மற்றும் தலைமுடியில் உள்ள ஈரப்பதம் முழுமையாகக் காய்ந்த பிறகே குளிர்ந்த வானிலையில் வெளியே செல்வது பாதுகாப்பானது.

தண்ணீர் குடிக்காதீர்கள்: குளித்த உடனேயே மிகுந்த தாகம் எடுத்தாலும், உடனடியாகக் குளிர்ந்த நீரைப் பருகுவதைத் தவிர்க்கவும். சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு, சாதாரண வெப்பநிலையில் உள்ள நீரைப் பருகவும்.



தேனி மாவட்டம் வைகை அணையில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது குறித்து மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் ஆர்.நிர்மல்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தலைமையில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

# திமுக-வில் இனி 10 துணை பொதுச்செயலர்கள்: ஸ்டாலின் புதிய முடிவு!

சென்னை, ஜூன். 13–

தி.மு.க.,வில் துணை பொதுச்செயலர்கள் எண்ணிக்கையை உயர்த்த, அக்கட்சியின் தலைவர் ஸ்டாலின் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

தி.மு.க.,வில் துணை பொதுச்செயலர்களாக கனிமொழி, பெரியசாமி, ராஜா, சிவா, அந்தியூர் செல்வராஜ், பொன்முடி, சாமிநாதன் ஆகியோர் உள்ளனர்.

முஸ்லிம், கிறிஸ்துவ மதத்தினருக்கும், தேவேந்திர குல வேளாளர், நாடார், நாயுடு சமுதாயத்தினருக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக, துணை பொதுச்செயலர் எண்ணிக்கையை உயர்த்த தி.மு.க., தலைவர் ஸ்டாலின் முடிவு செய்துள்ளார். தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: சட்டசபை தேர்தலில், சமூக பிரதிநிதித்துவ அடிப்படையில் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகம் நிறுத்தியதால், அக்கட்சி வெற்றி பெற்று, ஆட்சியை கைப்பற்றி உள்ளது. மதம், ஜாதி ரீதியான ஓட்டு வங்கி குறைந்தது, தி.மு.க., தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

கிறிஸ்துவர் ஓட்டுகள் த.வெ.க.,வுக்கு சென்று விட்டன. தி.மு.க., கூட்டணியில், 22 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த முஸ்லிம் லீக் கட்சியும்



வெளியேறி விட்டது. எனவே, துணை பொதுச்செயலர் பதவியில் கிறிஸ்துவ, முஸ்லிம் மதத்தினருக்கு பிரதிநிதித்துவம் தர வேண்டிய நிர்ப்பந்தம், தி.மு.க., தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது, துணை பொதுச்செயலர் பதவியில், முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியசாமி, சிவா உள்ளனர். தலித் சமுதாயத்திற்கு ராஜா, கவுண்டர் சமுதாயத்திற்கு சாமிநாதன், அருந்ததியர் சமுதாயத்திற்கு அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

அதனால், நாடார், நாயுடு, தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தினருக்கு பிரதிநிதித்துவம் தரும் வகையில், துணை பொதுச்செயலர் எண்ணிக்கையை ஏழில் இருந்து 10 ஆக உயர்த்த, ஸ்டாலின் முடிவு செய்துள்ளார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சற்றே உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 13–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.480 அதிகரித்து ரூ.1,10,880–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 அதிகரித்து ரூ.13,860–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 அதிகரித்து ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# பாஜக நிர்வாகி விஜயதரணி த.வெ.க.வில் ஐக்கியம்!



சென்னை, ஜூன். 13–

காங்கிரஸ் எம்எல்ஏவாக இருந்த விஜயதாரணி அக்கட்சியில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக கடந்த 2024–ம் ஆண்டு பாஜகவில் இணைந்தார்.

பாஜகவில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் விஜயதாரணி இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

விளவங்கோடு தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏவாக இருந்த விஜயதாரணி அக்கட்சியில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக கடந்த 2024–ம் ஆண்டு பாஜகவில் இணைந்தார்.

பாஜக சார்பில் கடந்த சட்டமன்ற தேர்தலில் விளவங்கோடு தொகுதியில் போட்டியிட்டு விஜயதாரணி தோல்வி அடைந்தார். அவர் 3–வது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

இந்நிலையில், பாஜகவில் எந்த பதவியும் வழங்கப்படாததால் அக்கட்சியில் இருந்து விலகி தவெகவில் விஜயதாரணி இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# பினாமி பெயரில் கான்ட்ராக்ட் எடுத்த திமுக மாஜிக்கள் மீது நடவடிக்கை?



சென்னை, ஜூன். 13–

தேர்தலில் தி.மு.க., தோல்வியடைந்தது குறித்து ஆராய அமைக்கப்பட்ட கள ஆய்வு குழு, தி.மு.க., தலைவர் ஸ்டாலினிடம் அளித்த அறிக்கையில், 'பினாமி பெயரில் 'கான்ட்ராக்ட்' எடுத்த முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கூறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சட்டசபை தேர்தல் தோல்வி தொடர்பாக, தி.மு.க.,வில் அமைக்கப்பட்ட 19 கள ஆய்வு குழுக்களில், 13 குழுக்கள் அறிக்கை அளித்துள்ளன; மற்ற குழுக்கள் அவகாசம் கேட்டுள்ளன. சென்னையில் மட்டும் 10,000 பேரிடம் கருத்து கேட்கப்பட்டுள்ளது.

3,000 பக்க அறிக்கையில், குழுக்கள் அளித்த சில பரிந்துரைகள்:

* வரும் தேர்தல்களில் தனித்து போட்டியிடுவதோடு, உட்கட்சி பிரச்னையை தொடர விடாமல், நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலர்கள், எம்.எல்.ஏ.,க்கள், தங்கள் பகுதிகளில் அரசு 'கான்ட்ராக்ட்' பணிகளை, பினாமி பெயரிலும், சிண்டிகேட் அமைத்தும் எடுத்துள்ளனர். அவர்கள் யார் என்பதை பட்டியலிட்டுள்ளோம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* ஒன்றிய செயலர்களிடம் தேர்தல் பணிக்காக வழங்கிய பணத்தை சுருட்டியவர்கள் மீது, நடவடிக்கை எடுக்க தயங்கினால், அதே தவறுகள் தொடரும் வாய்ப்புள்ளது
* இரண்டு முறைக்கு மேல் பதவியில் இருக்கும் ஒன்றிய செயலர்களை மாற்ற வேண்டும்.
* சத்துணவு பணியாளர்கள், ரேஷன் கடை ஊழியர் நியமனங்களுக்கு, கட்சியினர் பரிந்துரையை நிராகரித்த மாவட்டச் செயலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* சட்டசபை தேர்தல் தோல்விக்கு காரணமானவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி சாட்டையை சுழற்ற வேண்டும். உள்ளாட்சி தேர்தலில் உற்சாகமாக பணியாற்றும் வகையில் கட்சியை சீரமைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



மதுரை மாநகராட்சி அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மை பணிகள் குறித்து ஆணையாளர் கௌரவ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மாநகர்நல அலுவலர் மரு. அர்விந்த் ஜோதி அவர்கள், உதவி ஆணையாளர் .பிரபாகரன் அவர்கள், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அளவிற்கு மேல் நச்சுத் தன்மை: இந்திய மிளகாய்களை நிராகரித்த சீனா!




சீனா, ஜூன். 13–

இந்திய காய்ந்த மிளகாய்களில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சிக்கொல்லி எச்சங்கள் இருப்பதாகக் கூறி சீனா நிராகரித்தது. இதில் சம்பந்தப்பட்ட 3 நிறுவனங்களின் இறக்குமதி உரிமத்தை சீனா ரத்து செய்துள்ளது. இந்திய மிளகாய் ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கை சீனா வாங்குவது குறிப்பிடத்தக்கது.

# திடீரென டிரெண்டிங் ஆன JanaNayagan



எச்.வினோத் இயக்கத்தில் முதலமைச்சர் விஜய் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'ஜனநாயகன்'. கடந்த பொங்கல் பண்டிகையையொட்டி திரைக்கு வர இருந்த இந்த படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் படம் திரைக்கு வருவதில் இழுபறி நீடித்து வருகிறது. இது ஒருபுறமிருக்க 'ஜனநாயகன்' படம் ஆன்லைனில் கசிந்ததால் பலரும் கைதாகி வருவது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனிடையே, விஜய் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள நிலையில் படத்திற்கான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

'ஜனநாயகன்' படத்தின் தயாரிப்பாளர் வெங்கட் கே. நாராயணா சில தினங்களுக்கு முன்பு கூறுகையில், 'ஜனநாயகன்' தணிக்கை சான்றிதழ் வருவதற்காக காத்திருக்கிறோம். விரைவில் கிடைத்து விடும் என நம்புகிறோம். எவ்வளவு சீக்கிரம் படத்தை வெளியிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் 'ஜனநாயகன்' படத்தை வெளியிடுவோம் என்று கூறியிருந்தார்.

இதனை தொடர்ந்து 'ஜனநாயகன்' படம் வெளியீட்டு தேதி குறித்த உறுதிப்படுப்படாத தகவல்கள் அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி வருகிறது. இதற்கிடையே, விஜய் பிறந்தநாள் வருகிற 22–ந்தேதி கொண்டாடப்பட உள்ளதையொட்டி விஜயின் 'ஜில்லா', 'மெர்சல்' ஆகிய படங்கள் மீண்டும் வெளியாக உள்ளது. ஆனால் 'ஜனநாயகன்' படம் குறித்து உறுதியான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், இன்று 'Jananayagan' சமூக வலைத்தளத்தில் டிரெண்டாகி வருகிறது. ஒரு முதலமைச்சரின் படத்திற்கே இந்த நிலைமை என்றும் படத்த எப்போ சார் ரிலீஸ் பண்ணுவீங்க... என்றும் கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.

# வேலை வாய்ப்பு

## BRO மத்திய அரசு வேலை; 899 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: எல்லைச் சாலைகள் அமைப்பு (Border Roads Organisation)

அறிவிப்பு எண்: 01/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி முறை: நிரந்தரப் பணி

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 899 (வரைவாளர், இந்தி தட்டச்சர், ஸ்டோர் கீப்பர் (தொழில்நுட்பம்), தகவல் தொடர்பு ஆபரேட்டர், அகழ்வு இயந்திர ஆபரேட்டர் (OEM) (சாதாரண நிலை) மற்றும் எலக்ட்ரீஷியன் பணியிடங்கள்)

பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 21.05.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 04.07.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன் (நேரடி அஞ்சல்/ விண்ணப்பம் மூலம்)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://bro.gov.in/

# 3 அதிநவீன ஏவுகணைகள் சோதனை வெற்றி!



புதுடெல்லி, ஜூன். 13–

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) ஒரே தொடர்ச்சியான சோதனைகளில் 3 அதிநவீன ஏவுகணை சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள சோதனை தளத்தில் இருந்து இடைநிலைத்தூர பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு என வகைப்படுத்தப்பட்ட இரண்டு மேம்பட்ட இடைமறிப்பு ஏவு கணைகளை வெற்றிகரமாக சோதித்தது.

இந்த இடைமறிப்பு ஏவுகணைகள் வளிமண்டலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள பகுதிகளில் 2 ஆயிரம் கி.மீ முதல் 5 ஆயிரம் கி.மீ வரையிலான தூரத்தில் உள்ள எதிரி ஏவுகணைகளை கண்டறிந்து, பின் தொடர்ந்து செயலிழக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த சோதனையில் இரண்டு ஏவுகணைகளும் இலக்குகளை குறிவைத்து துல்லியமாக வெற்றிகரமாக தாக்கின. நீண்ட தூர மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) அச்சுறுத்தல்களை விண்வெளியிலும், வளிமண்டலத்திலும் இடைமறித்து அழிக்கும் திறன் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்டது.

அதேபோல் கடலில் உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் ஆற்றலை நிரூபிக்கும் வகையில், இந்த ஏவுகணை கடற்படை தளத்திலிருந்து முதன்முறையாக வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. இது கடல் மட்டத்திற்கு மிக அருகில் பறந்து சென்று எதிரிகளின் கப்பல்களைத் தாக்கும் திறன் கொண்டது.

இந்தச் சோதனைகள் மூலம் இந்தியாவின் தரை, வான் மற்றும் கடல்வழிப் பாதுகாப்பு பல மடங்கு வலுவடைந்துள்ளது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இந்தச் சாதனையைப் பாராட்டியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:இந்த இடைமறிப்பு ஏவுகணைகள் இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கின. நாளுக்கு நாள் அதிகரிக்கும் ஏவுகணை அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், இந்த அமைப்புகள் சமீபத்திய தொழில்நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த சோதனைகள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் வரையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகளை எதிர்கொள்ளும் திறன் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவை இணைத்துள்ளன. கடற்படை கப்பல் எதிர்ப்பு ஏவுகணையும் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டு உள்ளது. இவ்வாறு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# தேர்தல் முடிவுகள்: மாவட்ட வாரியாக ஆலோசனை நடத்தும் எடப்பாடி பழனிசாமி!


சென்னை, ஜூன். 13–
காஞ்சிபுரம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற தொகுதிகளை அடங்கிய காஞ்சிபுரம் மாவட்டத்தின் அதிமுக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் அதிமுக தலைமை அலுவலகமான எம்ஜிஆர் மாளிகையில் நடைபெற்றது. இதில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிவருகிறார். முன்னதாக எம்ஜிஆர் மாளிகைக்கு வருகை தரும் கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எம்ஜிஆர் மாளிகை வளாகத்தில் உள்ள புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் திருவுருவ சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



இந்தக் கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் கே பி முனுசாமி, பொருளாளர், திண்டுக்கல் சீனிவாசன், முன்னாள் அமைச்சர் பொன்னையன் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சருமான சோமசுந்தரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள்,மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூராட்சி, பகுதி கழகச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், அதிமுக அணி பிரிவு நிர்வாகிகள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்தும், அதிமுகவின் அடுத்த கட்ட ஆக்கபூர்வமான வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

# நிபா வைரஸ் எதிரொலி - தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த உத்தரவு!



சென்னை, ஜூன். 13–
கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தில் ஒருவருக்கு நிபா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது. அவருக்கு மருத்துவ குழுவினர் கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதேபோல. அவரோடு 3 தொடர்புடையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தக்கோரி மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி யுள்ளது. மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு, பொது சுகாதா ரத்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நிபா வைரஸ் விலங்குகள் மூலம் பரவும் ஒரு நோய்த்தொற்று. எனவே எவருக்கேனும் தொடர்ச்சியாக 3 நாள் காய்ச்சல், தலைவலி, வாந்தி உள்ளிட்டவை இருந்தால் உடனடியாக டாக்டரை அணுக வேண்டும். அறிகுறிகளுடன் வருபவர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்க வேண்டும். நிபா வைரஸ் பாதிப்பு இருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களை ஆஸ்பத்திரியின் தனி அறையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். எல்லையோர மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க.வில் விழப்போகும் அடுத்த விக்கெட்: அடுத்த வாரம் த.வெ.க.வில் இணைய விஜயபாஸ்கர் திட்டம்!



சென்னை, ஜூன். 13–
தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வியை தழுவிய நிலையில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.,வேலுமணி, சி.வி. சண்முகம் உள்ளிட்டோருடன் சேர்ந்து எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார் சி.விஜயபாஸ்கர். குறிப்பாக த.வெ.க. ஆட்சிக்கு ஆதரவளித்து சட்டமன்றத்தில் வாக்களித்தார். இதனால் புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து விஜயபாஸ்கரை நீக்கி புதிய மாவட்ட செயலாளரை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

இதனால் கடும் அதிருப்தியடைந்த விஜயபாஸ்கர் அப்போதே வேறு கட்சியில் இணைய திட்டமிட்டார். குறிப்பாக தமிழக வெற்றிக் கழகத்தில் அ.தி.மு.க. சீனியர்கள் பலரும் சென்று சேர்ந்துள்ள நிலையில், அந்த கட்சிக்கு செல்லலாமா? என்று தன்னுடைய ஆதரவாளர்களிடம் தொடர்ச்சியாக கருத்து கேட்டு வந்தார்.

அப்போது த.வெ.க. சென்றால் உரிய மரியாதை கிடைக்காது என்றும், கொள்கை ரீதியாக செயல்பட வேறு ஒரு பாதையை தேர்வு செய்ய வேண்டும் என்று விஜயபாஸ்கருக்கு சிலர் ஆலோசனை தெரிவித்தனர். இதனால் அவர் தாய் கழகமான தி.மு.க.வில் இணைய முடிவு செய்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

**த.வெ.க.வில் இணைகிறார்**

அவரது ஆதரவாளர்கள், விஜயபாஸ்கர் எந்த முடிவெடுத்தாலும் அவருடன் செல்ல ஏராளமான கட்சி நிர்வாகிகள் உள்ளனர். ஆனால் அவர் காலம் கடத்துவதால் அவரது செல்வாக்கில் சரிவு ஏற்படுவதை உணர முடிகிறது என தெரிவித்தனர். மேலும் விஜயபாஸ்கருக்கு ஆதரவாக விராலிமலை பகுதி முழுவதும் ஆதரவாளர்கள் சார்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டது.

தொடர்ந்து ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி வந்த நிலையில் இறுதியாக த.வெ.க.வில் இணைய விஜயபாஸ்கர் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக த.வெ.க. முக்கிய நிர்வாகிகளுடன் நடந்த பேச்சுவார்த்தை நிறைவடைந்த நிலையில் அடுத்த வாரம் புதன்கிழமை அவர் சென்னையில் தமிழக வெற்றிக்கழக தலைவரும், முதலமைச்சருமான விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைய திட்டமிடப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இணைப்பு விழாவை மிகப்பெரிய அளவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அப்போது விஜயபாஸ்கருடன் அவரது ஆதரவாளர்களும், புதுக்கோட்டை மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளும் பெருமளவில் த.வெ.க.வில் இணைய உள்ளனர்.

மேலும் த.வெ.க.வில் தனக்கு மற்றும் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவாக பேசி முடித்துள்ளதாக கூறப்படுகிறது. டெல்டா மண்டலத்தில் மிக வலுவான மக்கள் செல்வாக்கும், தேர்தல் வியூகங்களை வகுப்பதில் அசாத்திய திறமையும் கொண்டவரான விஜய பாஸ்கரின் வருகை த.வெ.க.விற்கு பெரும் பலமாக மாற வாய்ப்புள்ளது.

**6 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்**

ஏற்கனவே அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் 4 பேர் தங்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். தற்போது விஜயபாஸ்கரும் த.வெ.க.வில் இணைய உள்ளதால் அவரும் தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வார் என்பதால் விராலிமலை தொகுதியிலும் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளின் எண்ணிக்கை 6 ஆக உயரும். வருகிற 17–ந்தேதி (புதன்கிழமை) வளர்பிறை முகூர்த்தநாள் என்பதால் அன்று த.வெ.க.வில் இணைய விஜயபாஸ்கர் முடிவு செய்துள்ளதாகவும், தொகுதி மக்களின் கருத்தை கேட்டு இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# 8-வது சம்பள கமிஷனில் அரசு ஊழியர்களுக்கு ஜாக்பாட்!!




புதுடெல்லி, ஜூன். 13–
மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதிய தொகை ஆகியவற்றை உயர்த்துவது தொடர்பான பரிந்துரைகளை வழங்க 8ஆவது சம்பள கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. சம்பள கமிஷன் நாட்டின் விலைவாசி நிலவரங்களை ஆய்வு செய்து அரசு ஊழியர்களுக்கான சம்பள தொகையை நிர்ணயம் செய்யும். ஃபிட்மண்ட் ஃபேக்டர் அடிப்படையில் எத்தனை சம்பள உயர்வு தரலாம் என்ற பரிந்துரை வழங்கும்.

தற்போது 8ஆவது சம்பள கமிஷனிடம் அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் சார்பாக கோரிக்கை மனுக்கள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் மத்திய அரசு ஊழியர் சங்கங்கள் (NC–JCM) ஊதிய உயர்வை தாண்டி சில முக்கியமான கோரிக்கைகளை 8ஆவது சம்பள கமிஷனிடம் முன் வைத்துள்ளன. இந்த பரிந்துரைகளை அரசு ஏற்கும் பட்சத்தில் அரசு ஊழியர்கள் சில முக்கியமான பண பலன்கள் கிடைக்கும். தற்போதைய காலகட்டத்தில் கார் என்பது ஒரு ஆடம்பரப் பொருள் அல்ல, அது ஒரு நடுத்தரக் குடும்பம் ஒட்டுமொத்தமாகப் பயணம் செய்யத் தேவையான அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்டது என கூறும் அரசு ஊழியர்கள் சங்கம் அரசு ஊழியர்கள் கார் வாங்குவதற்காக 10 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லாத கடனாக வழங்க வேண்டும் என கேட்டு கொண்டுள்ளது.

இதற்கு முன்பு வழங்கப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்ட ‘பண்டிகை முன்பண’ முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என கேட்டு கொண்டுள்ளனர். ஊழியர்களின் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்திற்கு நிகரான தொகையை பண்டிகை முன்பணமாக வழங்க வேண்டும். இதனை ஊழியர்கள் 10 தவணைகளில் திரும்பச் செலுத்த வழிவகை செய்ய வேண்டும் என கேட்டு கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் எதிர்பாராத கனமழை, வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களால் ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு உதவ முன்பு வழங்கப்பட்டு வந்த பேரிடர் முன்பணம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. வட்டி இல்லாத இயற்கை பேரிடர் முன்பணத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும். இதன்கீழ் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை முன்பணமாக வழங்கி, அதனை ஊழியர்களிடமிருந்து 24 தவணைகளில் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என வலியுறுத்தியுள்ளனர்

இது தவிர, தற்போது நடைமுறையில் உள்ள கணினி வாங்குவதற்கான முன்பணம் மற்றும் வீடு கட்டுவதற்கான முன்பணம் ஆகியவற்றின் உச்ச வரம்பையும் கணிசமாக உயர்த்த வேண்டும் என ஊழியர் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 8ஆவது சம்பள கமிஷன் இந்த பரிந்துரைகள் ஏற்று அரசிடம் சமர்ப்பித்து அரசும் இவற்றுக்கு அனுமதிக்கும் பட்சத்தில் 1.1 கோடிக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயனடைவார்கள். ஏற்கனவே சம்பள கமிஷன் தாமதமாக அமைக்கப்பட்டு சம்பள உயர்வு தள்ளி போகிறது என அதிருப்தியில் இருக்கும் அரசு ஊழியர்கள் சம்பள உயர்வை தாண்டி தங்களின் கோரிக்கைகளை ஆவது அரசு நிறைவேற்ற வேண்டும் என கேட்கின்றனர்.

# தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை இயல்பை விட குறையும்!



சென்னை, ஜூன். 13–
தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இயல்பை விட குறைவாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

எல் நினோ தற்போதைய நிலை மற்றும் எதிர்கால மாற்றம் குறித்து ஆய்வு செய்து அறிவித்துள்ளது.

தற்போது பசிபிக் பெருங்கடலில் எல்நினோ நிலை உள்ளது மற்றும் இது எதிர்காலத்தில் அதிக வலுப்பட வாய்ப்பு உள்ளது. பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை பொதுவாக 26 முதல் 28 செல்சியஸ் டிகிரியாக இருக்கும். இந்த வெப்பநிலையில் இருந்து 0.5 கூடினால் எல் நினோ உருவானதாக அர்த்தம். தற்போது பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகமாக உள்ளன. அடையாளக் குறியீடு 28 செல்சியஸ் டிகிரியில் இருந்து 0.5 அதிகரித்துள்ளன.

## சினிமா துளிகள்..!

## இன்றைய சினிமா ஹைலைட்!




**ஹாலிவுட்**

Paramount Warner Bros. மெகா இணைப்பு ஒப்புதல்

அமெரிக்க நீதித்துறை, Paramount–Skydance மற்றும் Warner Bros. Discovery இணைப்புக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது ஹாலிவுட்டின் மிகப்பெரிய வணிக ஒப்பந்தங்களில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

டேவிட் பெக்காமுக்கு ஹாலிவுட் Walk of Fame

கால்பந்து ஜாம்பவான் டேவிட் பெக்காம், ஹாலிவுட் Walk of Fame நட்சத்திர விருதைப் பெற்றார். விழாவில் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்து உணர்ச்சிவசப்பட்டார்.

**பாலிவுட்**

‘Main Vaapas Aaunga’ திரைப்படம் வெளியீடு

இம்தியாஸ் அலி இயக்கிய Main Vaapas Aaunga படம் முதல் நாளில் நல்ல வரவேற்பைப் பெற்று பாக்ஸ் ஆபிஸில் முன்னிலை பெற்றுள்ளது.

FIFA உலகக் கோப்பை விழாவில் நோரா பதேஹி

2026 FIFA உலகக் கோப்பை தொடக்க விழாவில் பாலிவுட் நடிகை நோரா பதேஹி நடனமாடி ரசிகர்களை கவர்ந்தார்.

**ஹ்ரித்திக் ரோஷனின் ஹாலிவுட் முயற்சி?**

ஹ்ரித்திக் ரோஷன், அமெரிக்காவின் Anonymous Con–tent நிறுவனத்துடன் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் ஹாலிவுட் வாய்ப்பு உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவோமிகா சரண் பாலிவுட் அறிமுகம்

ராஜேஷ் கன்னா டிம்பிள் கபாடியாவின் பேத்தி நவோமிகா சரண், புதிய காதல் திரைப்படம் மூலம் ஹீரோயினாக அறிமுகமாகிறார்.

**கோலிவுட்**

பாரதிராஜா மீண்டும் டிரெண்டிங்

தமிழ் சினிமாவின் கிராமிய புரட்சியை ஏற்படுத்திய இயக்குநர் பாரதிராஜா குறித்து பல்வேறு சிறப்பு கட்டுரைகள் வெளியாகி வருகின்றன.

**சசிகுமார் புதிய படப்பிடிப்பு தொடக்கம்**

புதிய படத்தின் படப்பிடிப்பை தொடங்குவதற்கு முன் இயக்குநர் பாரதிராஜாவுக்கு நடிகர் சசிகுமார் மரியாதை செலுத்திய வீடியோ வைரலாகியுள்ளது.

**2026 தமிழ் சினிமா எதிர்பார்ப்பு அதிகரிப்பு**

2026–ல் வெளியாகவுள்ள பல பெரிய தமிழ் படங்கள் குறித்து ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

# அசாம் மாநிலத்தில் விமானப்படை விமானம் விபத்தில் சிக்கியது!



குவஹாத்தி, ஜூன் 13–
அசாம் மாநிலம் ஜோர்ஹட் பகுதியில் இந்திய விமானப்படையின் ஏஎன் 32 ரக விமானம் தீப்பற்றி வெடித்தது.

அசாமின் ஜோர்ஹட்டில் உள்ள விமானப்படைத் தளத்திற்கு அருகே, இந்திய விமானப்படைக்குச் சொந்தமான போக்குவரத்து விமானம் (ஜூன் 13) காலை விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ரவுரியா விமானப்படைத் தளத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளான அந்த விமானம், ஏஎன்32 ரகத்தைச் சேர்ந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது. விமானத்தில் முதலில் திடீரென தீப்பற்றியதால் வெடித்து சிதறியது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020